


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'புதுமைப்பெண்' திட்டத்தின் விரிவாக்கத்தை தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பழனி சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை 30.12.2024 அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணை இயக்குநர் திருமதி கு.கண்மணி, பழனி சார் ஆட்சியர் எஸ்.கிஷன்குமார், மாவட்ட முன்னோடி வங்கி பொது மேலாளர் அருணாச்சலம், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி கோ.புஷ்பகலா, சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ந.புவனேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி உடன்குடி சிறுநாடார் குடியிருப்பு பகுதியில் வேதகோட்டைவிளை கொட்டங்காடு பகுதியில் புதிய வழித்தடத்தில் பேருந்து வசதியினை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் இயக்கி வைத்தார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், உடன்குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் இளங்கோ, உடன்குடி யூனியன் சேர்மன் பாலசிங், உடன்குடி பேரூராட்சிக் கவுன்சிலர்கள் ஜான் பாஸ்கர் பஷீர், பாலாஜி, அன்புராணி, ராஜேந்திரன், மாநில மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் ஜெசி பொன்ராணி, மாவட்டப் பிரதிநிதிகள் ஜெயப்பிரகாஷ், மதன்ராஜ், மகேஸ்வரன், தன்ராஜ், செட்டியாபத்து ஊராட்சி மன்றத் தலைவர் பாலமுருகன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் மகாவிஷ்ணு, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் செந்தில், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அலாவுதீன், கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மனோஜ், மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பாய்ஸ், பாலகணேசன், பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சின்னக் கலையம்புத்தூர் பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில்

# 'புதுமைப்பெண்' திட்ட பயனாளிகளுக்கு அட்டைகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

திண்டுக்கல், ஜன. 3 –

சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட பயனாளி கள் அட்டைகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது: –

**மகளிர் முன்னேற்றத்திற்கு பல்வேறு புதிய திட்டங்கள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 ஆம் ஆண்டில் ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆகியோர் கண்ட கனவு பெண்கள் முன்னேற வேண்டும். பெண்கள் சமுதாயத்தில் தன்னிறைவு பெற வேண்டும். அதனால் தான் தந்தை பெரியார் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, பெண் களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, உள்ளாட்சியில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென விரும்பினார். அவர்களுடைய கனவை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த சமயத்தில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொண்டு வந்தார். 2006ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலில் 33 சதவிகித இடஒதுக்கீடு கொண்டு வந்தார்.

அதற்கு பின்பு உள்ளாட்சியில் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், மாநகராட்சி மேயர், மாவட்ட ஊராட்சி தலைவர்கள் என தற்போது பெண்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 1996ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் 10ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் சென்றால் பேருந்தில் கட்டணமில்லா சலுகை வழங்கப்படும் என அறிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காக பெண்கள் சுய உதவிக்குழுக்கள் துவங்கப்பட்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காக சுழல் நிதி, பொருளாதார நிதி, மானிய நிதி என பல்வேறு நிதிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் கல்லூரியும் ரெட்டியார்சத்திரத்தில் உயர்கல்வித்துறையின் சார்பில் கல்லூரியும், களைஞ்சியத்தில் உயர்கல்வித்துறையின் சார்பில் கல்லூரியும், பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. இதுபோல் பெண்கள் முன்னேற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் தமிழ்நாடு அரசு ரூ.50 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பெற்றோரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கிறது!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பெண்கள் அரசு பள்ளியில் படித்து உயர் கல்விக்கு சென்றால் ரூ.1000 வழங்கும் திட்டத்தை 05.09.2022 ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வட சென்னை பாரதி மகளிர் கல்லூரியில் முதன்முதலில் தொடங்கப்பட்டது. இத்திட்டம். வறுமை காரணமாக உயர்கல்வியில் சேர இயலாத மகளிர்க்கு உயர்கல்வி வாய்ப்பை தருவதோடு. பெற்றோரின் பொருளாதாரச் சுமையை குறைக்கிறது. இளம் வயது திருமணங்களையும் தடுக்கிறது. மாணவியர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது. இத்திட்டத்தின் பயனாக, மாணவியர்கள் அதிகளவில் உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் மூலம் அரசு உதவி பெறும் பள்ளியில் 5604 பயனடைந்து வருகிறார்கள்.

புதுமைப்பெண் திட்டத்தினை தொடர்ந்து மாணவர்களின் சேர்க்கை விகிதத்தினை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்ப்புதல்வன் என்னும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 09.08.2024 அன்று துவக்க விழா நடைபெற்றது. தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் தற்பொழுது 6921 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடியில் 30.12.2024 அன்று நடைபெறும் விழாவில் புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 10 பொறியியல் கல்லூரிகள், 22 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 1 மருத்துவக்கல்லூரி மற்றும் 10 நர்சிங் கல்லூரிகள், 8 தொழிற் பயிற்சி நிலையங்கள், 10 பாலிடெக்னிக் கல்லூரிகள், ஒரு சட்டக் கல்லூரி, ஒரு ஆசிரியர் பயிற்சி நிலையம், ஒரு பல்கலைக்கழகம், 8 பார்மஸி மற்றும் 3 வேளாண்மை கல்லூரிகள் உட்பட 75 கல்லூரிகளில் 3681 மாணவிகள் பயன் பெற தகுதியான நிலையில் உள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் 9255 மாணவியர்கள், 6921 மாணவர்கள் என மொத்தம் 16,276 பயன்பெற்று வருகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிகாலத்தில் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் திட்டத்தை செயல்படுத்தினார். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டங்களை மாணவ, மாணவிகள் நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும், என அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்.

கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா. பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணை இயக்குநர் கு.கண்மணி ஆகியோர் முன்னிலையில் பழனி சின்னக்கலையம்புத்தூர் அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் புதுமைப்பெண் திட்ட பயனாளிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார்.

# 'வேர்களைத்தேடி' பண்பாட்டு கலைப் பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை!

## புலம்பெயர் தமிழர்களை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று கலந்துரையாடினார்!

*திருவள்ளூர், ஜன. 3 -*

*கன்னியாகுமரி விருந்தினர் மாளிகையில் வேர்களைத்தேடி பண்பாட்டு கலை பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த புலம்பெயர் தமிழர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடினர்.*

*இதனை தொடர்ந்து தெரிவிக்கையில் தமிழ்நாடு முதலமைச் சர் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள் இளம் மாணவர்கள், தாய்த்தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்தார்கள்.*

*அதனடிப்படையில், இந்த பண்பாட்டு பயணம் 'வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் சுற்றுலாத்துறை, பண்பாட்டுத்துறை. இந்து சமய அறநிலையத்துறை, தொல்லியல் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உள்ளிட்ட பிற துறைகளுடன் இணைந்து இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது. இந்த இரண்டு கட்ட பயணத்தில் 157 அயலகத்தமிழ் மாணவ, மாணவியர்கள் முதன்முறையாக தமிழ் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டு தமிழின் தொன்மை, தமிழர் வாழ்வியல் கலாச்சாரம் குறித்து விளக்கப்பட்டது. தமிழர்களின் கலைகளை அறிமுகப்படுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.*

*தொடர்ந்து மூன்றாம் கட்ட பயணமாக உகாண்டாவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், நார்வேயை சார்ந்த 1 புலம்பெயர் தமிழர், தென் ஆப்ரிக்காவை சேர்ந்த 1 புலம்பெயர் தமிழர், மொரிசியசை சார்ந்த 10 புலம்பெயர் தமிழர்கள், மலேசியாவை சேர்ந்த 11 புலம்பெயர் தமிழர்கள், இலங்கை சார்ந்த 6 புலம்பெயர் தமிழர்கள்,ஆஸ்திரேலியாவை சேர்ந்த 4 புலம்பெயர் தமிழர்கள் கனடாவை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர். அமெரிக்காவை சேர்ந்த 2புலம் பெயர் தமிழர்கள் மற்றும் மியான்மரை சேர்ந்த 1புலம்பெயர் தமிழர் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த 38 அயலகத்தமிழ் மாணவ மாணவியர்களுடன் 29.12.2024 அன்று தொடங்கப்பட்டு 12.01.2025 அன்று வரை நடைபெறும்.*

*இக்கலை பயணமானது அயல்நாடுகளில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு வரவழைத்து தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு. தமிழ்நாடுஅரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவார்கள்.*

*இவ்வாறு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் புலம்பெயர் தமிழக மாணவ - மாணவியர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள்.*

*நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், அயலகத் தமிழர் நல வாரிய துணை இயக்குநர் கிராமேஷ். அயலகத்தமிழர் நல வாரிய உறுப்பினர் மீரான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், அலுவலர்கள், புலம்யெர் தமிழக மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.*

### பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கூட்டங்களை

# நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் நடத்திடுவோம்!

## மாவட்டக் கழகச் செயற்குழுத் தீர்மானம்! என்.கௌதமன் அறிவிப்பு!

*நாகை, ஜன. 3 -*

*நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டளத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்கள் நாகை ஆர்.அருள்செல்வம், கீழ்வே ளூர் இரா.சங்கர், வேதாரண்யம் வி. ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் பேசினார்.*

*கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே. வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப. கோவிந்தராசன், இல.மேகநாதன், மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஆரூர்மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், கற்பகம்நீலமேகம், மாவட்டக் கழக பொருளாளர் மு. லோக நாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை நல பிரிவு துணை செயலாளர் சாகுல் ஹமீது, ஒன்றியச் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா. குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கோசி.குமார், உமாசெந்தாமரை, பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி. சுப்பரமணியன், முகமது சுல்தான், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, ஆர்.துரைராசு, கேஸ் வி.செந்தில், பி.முருகானந்தம், கே.எஸ். சாகுல்ஹமீதுராஜா, எஸ். வி.டி.அருள், எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர்.குலோத்துங்கன், இளம்.சுந்தர், எஸ். சுந்தர் த.தமயந்தி, வ.கமல், எஸ்.வெற்றிசெல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தி.கலையரசன், கே.சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, துணை அமைப்பாளர் விமல்மொக்கை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

# நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

*உதகை, ஜன. 3 -*

*நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் ஜன.4 அன்று நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் (4.01.2025 - சனிக்கிழமை) நாளை காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல்*



*பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்) மற்றும் அ. திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.*

*இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.*

*பொருள் : 1. தலைமை கழக அறிவிப்பின்படி, 8.1.2025ம் தேதிக்குள் வாக்குச்சாவடி குழுவினர் (BLC) பட்டியலை நிறைவு செய்தல் குறித்து. 2. மாவட்டத்திலுள்ள அனைத்து நகரஒன்றியபேரூர்கிளை கழகங்களிலும், தமிழர் திருநாள் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து. 3. கழக ஆக்க பணிகள்.*

*இவ்வாறு பா.மு.முபாரக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*



தருமபுரி மாவட்டம், அரூர் கோபாலபுரம் சுப்பிரமணி சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நடப்பு ஆண்டு கரும்பு அரவையினை தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி துவக்கி வைத்தார். உடன் கூட்டுறவு ஆலை செயலாட்சியர் திருமதி.பிரியா, தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கவிதா, ஒன்றியச் செயலாளர்கள் சௌந்தரராசு, முத்துக்குமார், சரவணன், இல.கிருஷ்ணன், அரூர் பேரூர்ச் செயலாளர் முல்லை ரவி,பேரூராட்சி துணைத் தலைவர் சூர்யா.தனபால் உள்ளிட்ட கழகத்தினர், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ம.த. மல்லையன்**

**சனவரி 3 (2014)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் வழிநின்று கம்பம் பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத் தலைவராக தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து, அறிஞர் அண்ணா முதல்வராக இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியும் – தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது எண்ணற்ற நலத்திட்டங்களையும் கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம் கழகத்திற்கு நற்பெயரைப் பெற்றுத் தந்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் மற்றும் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**